# திராவிடப் போராளிகள்

**41** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## பெண் உழைப்பு போற்றிய சிதம்பரத்தம்மாள்!



ஓவியம் : ரவி பேலட்

*1929*-ஆம் ஆண்டு, பிப்ரவரி 17, 18 இரண்டு நாட்களில் செங்கல்பட்டு நகரில் நடைபெற்ற **‘சுயமரியாதை மாநாடு’** வரலாற்றுப் புகழ்மிக்கது. இரண்டு நாட்களிலும் வெவ்வேறு தலைப்புகளின் கீழ், கூடிய அரங்குகளில் **திருவாட்டி சிதம்பரத்தம்மாள்** என்ற அம்மையார் மேடையில் முழங்கினார். இளைஞர் பிரிவு மாநாட்டில் செல்வி வள்ளியம்மாள் என்ற இளம்பெண் தலைமையேற்று உரையாற்றினார். அவர்கள் இருவரும் தாயும் மகளும் என்பதுதான் சிறப்புச் செய்தி.

சிதம்பரத்தம்மாள் என்றே அழைக்கப்பட்டாலும் அவரது இயற்பெயர் சிதம்பர வடிவு. பிறந்த ஊர் முன்னீர்ப்பள்ளம். அவரது தந்தையார், இ.பொ.ஈஸ்வரமூர்த்தி, சிறந்த தமிழ்ப் புலவர். சிதம்பர வடிவு அவர்கள் மொழிப்பற்றும் கல்வி அறிவும், தொண்டு மனப்பான்மையும் இயற்கையிலேயே கொண்டவராக இருந்தார்.

1902-ஆம் ஆண்டு செ.தெ.நாயகம் அவர்களை மணந்தார். அவருடன் இணைந்து கல்விப் பணிகளிலும் பின், சுயமரியாதை இயக்கத்தின் நிகழ்வுகளிலும் முனைந்து செயலாற்றினார்.

### பெரியாரால் அறிமுகம்

1933 -ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ஆம் நாள் ஈரோட்டில் நடைபெற்ற கோவை ஜில்லா பெண்கள், மாநாட்டுத் தலைவர் ‘தோழர் செ.தெ.நாயகம் சிதம்பரம் அம்மாள். தந்தை பெரியாரே சிதம்பரத்தம்மாளின் தகுதிகளை எடுத்துக்கூறி அம்மாநாட்டிற்குத் தலைமை ஏற்குமாறு முன்மொழிந்திருக்கிறார்.

தந்தை பெரியார் தனது உரையில், “பெரியோர்களே! தோழர் சிதம்பரத்தம்மாள் ஆங்கிலத்தில் F.A. படித்தவர். அவரது கணவர் தோழர் செ.தெ.நாயகம் அவர்கள் அரசுப் பணியில் மாதம் 500 ரூபாய் சம்பளத்தில் கூட்டுறவுத் துறையில் துணைப் பதிவாளர் என்னும் பெரிய பதவியில் இருந்தவர். அவருடைய பிள்ளைகள் பெரிய பெரிய பதவிகளில் உள்ளனர். பெண் பிள்ளைகள் எல்லாம் பி.ஏ.படித்துள்ளனர். இங்கு வந்திருக்கும் அவருடைய இளையமகள் கூட பி.ஏ. படித்தவர்” என்று குறிப்பிட்டார்.

இந்த செய்தி 3.12.1933 **‘புரட்சி’** இதழில் வெளிவந்துள்ளது.

இப்படி ஒரு அறிமுகத்தை தந்தை பெரியார் மூலமே பெற்ற சிதம்பரம் அம்மையாரின் கணவரான செ.தெ.நாயகம் அவர்கள் திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர். சாதி மறுப்பு, கல்விப் பொதுமை, பெண்ணுரிமை செயல்திட்டங்கள் என தானே முன்னெடுத்து நடத்திக் காட்டியவர். **‘தமிழர் காவலர்’** என்று திராவிட இயக்கத் தலைவர்களால் போற்றப்பட்டவர்.

### சாதி மடமை மீது இடி

தமிழ்ப் பற்று என்பதே சாதிப் பற்றாகவும் சைவ சமயப் பற்றாகவும் கருதப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் சிதம்பரம் அம்மையார். ஆனால், அவரது சிந்தனைகளோ சாதிக்கும் மதத்துக்கும் எதிராகவே இருந்தன.

25.11.1933 அன்று அவர் ஈரோட்டில் ஆற்றிய தலைமையுரையில், “நம்மில் பல ஜாதிகள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். முதலில் ஜாதிப் பிரிவுகள் எப்படி வந்தது என்றால், அவரவர் செய்த தொழிலால் என்று தெரிகிறது, பிந்தித்தான் ஆதிக்கமுள்ளவர்கள் தங்களை மேல் ஜாதியார்கள் என்றும் மற்றவர்களைத் தாழ்ந்த ஜாதியார் என்றும் தீண்டப்படாதவர்கள் என்றும் சொல்லி, இழிவுபடுத்தித் துன்பப்படுத்தவும் செய்தார்கள், துன்பப் படுத்திக்கொண்டும் இருக்கிறோம் .

இவ்வியக்கம், ஜாதிப்பிரிவு மக்களாகவே ஏற்டுத்திக் கொண்டதாகவும் கடவுளே அவரவர் செய்த பாவப்புண்ணியத்திற்குத் தக்கதாக மேல் ஜாதியிலும் கீழ் ஜாதியிலும் பிறப்பிக்கிறார் என்று பாமர ஜனங்கள் எண்ணிக் கொண்டிருப்பது தவறு என்பதையும் அம்மக்களுக்கு எடுத்துணர்த்திக் கொண்டு வருகிறது. அதன் பயனையும் நாம் இப்பொழுது அனுபவத்தில் பார்க்கிறோம்” என்று பேசிய கருத்துகள் ஜாதி போற்றும் மடமைக் கோட்டையின் மீது இடியாக விழுந்தன.

> **யாராவது ஒரு பெண், ‘எனக்குச் சுதந்திரம் வேண்டியதில்லை; நான் ஆண்கள் சொன்னபடியே கேட்டு, அவர்களிட்ட வேலையைச் செய்து; போட்ட சோற்றைத் தின்னத்தான் எனக்குப் பிரியம் என்று சொல்லுவாள்’ என்று நினைக்கவில்லை.**

### உழைப்பே உரிமைக்கான கடவுச்சீட்டு

சாதியொழிப்பைப் போலவே பொருளாதார பேதங்களும் ஆணாதிக்கமும், பெண்ணடிமைத்தனமும் ஒழிய வேண்டும் என்ற சிந்தனையை சிதம்பரம் அம்மையார் முன்வைத்தார் .

“இவ்வியக்கம் பெண்களுக்குப் பூரணச் சுதந்திரம் வேண்டுமென்று சொல்லி, அதை நாம் அடைவதற்கு அரும்பாடுபட்டு வருகிறது. இந்த அபிப்பிராயத்தில் நம்மில் ஒருவருக்கும் பேதம் இருக்காது என்று நம்புகிறேன். அதாவது இங்கு இருப்பவர்களில் யாராவது ஒரு பெண், ‘எனக்குச் சுதந்திரம் வேண்டியதில்லை; நான் ஆண்கள் சொன்னபடியே கேட்டு, அவர்களிட்ட வேலையைச் செய்து; போட்ட சோற்றைத் தின்னத்தான் எனக்குப் பிரியம் என்று சொல்லுவாள்’ என்று நினைக்கவில்லை.

“இப்போது எங்கு பார்த்தாலும், கர்ப்ப ஆட்சியைப் பற்றிய பேச்சாய் இருக்கிறது. இதைப் பற்றி இப்பெண்கள் கூட்டத்தில் விவாதித்து, ஒரு முடிவிற்கு வர பெண்களுக்குத் தனி உரிமை உண்டென்று கருதுகிறேன்”என்று பெண்களின் சுயமரியாதை உணர்வைத் தட்டி எழுப்பினார்.

அதே நேரத்தில் பெண்ணுரிமையை அடைவதில் பெண்களின் பங்கு என்ன என்பதைப் பற்றியும், உழைப்பே உரிமைக்கான கடவுச் சீட்டு என்பதையும் விளக்கினார்.

“நமது பெரியார் போன்ற ஆண்கள் வேலை செய்வதால், மட்டும் நாம் சுதந்திரமடைய உரிமையுடையவர்கள் ஆகிவிடமாட்டோம். நாமும் முயற்சி செய்ய வேண்டும். எப்படியென்றால், நாமும் அறிவிலும், அனுபவத்திலும் அவர்களை ஒத்திருக்கும்படி நம்மைப் பயிற்சிசெய்து கொள்ளவேண்டும்.

நாம் நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களை கவனித்தால், ஆணும் பெண்ணும் பாடுபட்டுச் சம்பாதிக்கக்கூடிய வகுப்புகளில் பெண் ஆணுக்கு அடங்கி நடப்பதைக் காணவில்லை. சில வகுப்புகளில் ஒரு பெண் தன் புருஷன் தன்னைத் துன்பப்படுத்துகிறவனாக இருக்கிறான் என்று தெரிந்தபொழுது நான்கு பெரிய மனிதரிடம் சொல்லி, தன் கல்யாணத்தை ரத்து செய்து கொள்கிறாள்.

“தனியே போய் தனக்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்துக்கொள்ளமுடியும். ஆகையால், நமக்கும் நமக்கு வேண்டிய பொருளைத் தேடிக் கொள்ள வழி தெரிந்திருக்க வேண்டியது அவசியம்”என்று அக்காலத்து மேல்தட்டுப் பணக்காரப் பெண்களுக்கு அவர்களது சமூக உயர்நிலை என்பதே அடிமை தனத்திற்கான காரணியாகவும் உள்ளது என்பதை விளக்கியது அவரது உரை.

### சிறை சென்றதற்கு வாழ்த்து

கல்வித் தொண்டு செய்வதில் தன் கணவரான செ.தெ.நாயகம் அவர்களுக்கு முழுமூச்சாகத் துணை நின்ற சிதம்பரம் அம்மையார், தமது தங்க நகைகளைத் தன் கணவரின் கல்விப் பணிக்கு நன்கொடையாக அளித்தார். இந்தி திணிப்பு எதிர்ப்புப் போரில் செ.தெ.நாயகம் கைது செய்யப்பட்டபோது, அவருக்கு வாழ்த்து கூறி அனுப்பினார்.

சிதம்பரம் அம்மையார் செ.தெ .நாயகம் ஆகியோரின் இல்வாழ்க்கை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்துக்காட்டிய, **‘நல்லதொரு குடும்பம் - பல்கலைக்கழகம்’** என்பதற்கு விளக்கமாகத் திகழ்ந்தது. அவரது பிள்ளைகள் முத்தம்மாள், வள்ளியம்மை, அறம்வளர்த்த நாயகி, நெல்லை நாயகம், ஈஸ்வர நாயகம் ஆகிய அனைவரின் குடும்பத்தினரும் கல்வி கற்று உயர்நிலையை அடைந்தனர்.

அவர்களில் நெல்லை நாயகம்-ஞானம் தம்பதியின் மகன் மருத்துவர் செ.நெ.தெய்வநாயகம் அவர்கள் தமிழ்நாடு அரசு மருத்துவராகத் தொண்டாற்றியவர். அயோத்திதாசப் பண்டிதர் சித்த மருத்துவமனையின் முதல் இயக்குநராகப் பொறுப்பேற்றவர்.

சுயமரியாதை இயக்கத்தை மக்கள் இயக்கமாக ஆக்குவது பற்றிச் சிந்தித்த திராவிட இயக்கப் போராளியான சிதம்பரம் அம்மையார், “இனிமேல் பெண்களாகிய நாம் வெறும் பேச்சளவோடு நில்லாமல், ஆக்கல் தொழில்களிலும் முயற்சித்தால் இவ்வியக்கங்களுக்கு அணைச் சுவர் போட்டதுபோல் ஆகும் என்பது எனது துணிபு. நாம் செய்யக்கூடிய தொழில்கள் என்னவெனின், சிறுவர் சிறுமிகள் பள்ளிக்கூடம், துணி நெய்தல், நாடா நெய்தல், கூடைப்பின்னல் போன்ற சிறுதொழிற்சாலைகள், திக்கற்ற பெண்களுக்கு உதவிச் சாலை போன்றவை. இவைகளில் நாம் வேலைசெய்தால், எல்லா ஏழை மக்களும் நமது கொள்கைகளை வெகு சீக்கிரத்தில் உணரும்படி செய்யலாமென்பது எனது கருத்து” என்று தன் உரையில் வழங்கிய அறிவுரைகள் இன்றும் நமக்கு வழிகாட்டியாய் விளங்குகின்றன.

(வருவார்கள்...)

## உண்மைகளை அறிந்து தெளிவோம்!

**பொ**ய்களையும் வதந்திகளையும் புதிய புதிய வடிவங்களில் பரப்ப வேண்டும் என இலக்கு வைத்து, தினமும் வேலை செய்து வருகிறது அறிவு நாணயமற்ற கும்பல்கள். வரலாறு குறித்த அறிவீனம், போலித் தகவல் குறித்த அச்சம், பொய்யான புள்ளிவிவரங்கள் குறித்த கூச்சம் என எந்த மான உணர்ச்சியும் இன்றிப் பரப்புவதை வாடிக்கையாக வைத்துள்ளனர்.

சமீபத்தில், திராவிட ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் கூறியதாக ஒரு பதிவு ‘வாட்ஸ் அப்’பில் பரவியது. அவர் குறிப்பிடாத தகவல்களுடன் அந்தச் செய்தி பரவி, அவர் விளக்கம் கொடுக்க வேண்டிய நிலை உருவானது. அதுபோன்ற நிலைமைகளில், உறுதிப்படுத்தப்படாத வாட்ஸ்அப் பரவல்களின்போது உண்மைகளை அறிந்துகொள்ள ‘ஃபேக்ட் செக்கிங்’ எனப்படும் பொய்ச் செய்திகளைத் தோலுரிக்கும் இணையங்களைப் பயன்படுத்தி உறுதி செய்யலாம்.

தமிழ்நாடு மாடல் எனப் போலியாகப் பரப்பப்படும், புகைப்படங்கள், பொய்ச் செய்திகளைத் தொடர்ச்சியாக youturn.in இணையதளம் வெட்ட வெளிச்சமாக்கி வருகிறது. ‘அறிவுடையார் ஆவது அறிவார்’ என்கிறது திருக்குறள். அதற்கு “ஒரு விளைவுக்கு எதிர் விளைவு எப்படி இருக்குமென அறிவுடையவர்கள்தான் சிந்திப்பார்கள். அறிவில்லாதவர்கள் சிந்திக்க மாட்டார்கள்” என விளக்குகிறார் கலைஞர்.

## ஃப்ளாஷ்பேக்



### நெருக்கடியில் ஆதரவு!

**1972**-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். கழகத்தை விட்டுப் பிரிந்த நேரத்தில் தி.மு.க.வில் இணைந்தேன். 1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலைக் கொடுமைகளுக்கு நடுவே, தமிழ்நாடெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தலைவர் கலைஞரை சந்திக்க, சென்னை, கோபாலபுரம் இல்லத்துக்கு வந்து செல்வது வழக்கமான ஒன்றாக இருந்தது. நான் தொழிற்சங்கத்தில் தீவிரமாகப் பணியாற்றி வந்த காலகட்டம். மிசா கைதுகளும் அதிகம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது திருவொற்றியூரிலிருந்த தோழர்கள் சிலருடன் நானும் தலைவர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து எங்களின் ஆதரவைத் தெரிவித்தோம். என் வாழ்நாளில் மறக்க முடியாத புகைப்படம் இது.



பாண்டியராஜ்

**-இரா.பாண்டியராஜ், மருத்துவ அணித் தலைவர், சென்னை வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஒருமாத கார் பயணம்

**1959-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நாள் வடமாநிலங்களுக்குப் பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கினார் தந்தை பெரியார். ஒரு மாத காலம், 4 ஆயிரம் மைல் தூரப் பயணத்தில், சென்ற இடங்களில் எல்லாம் பொதுக் கூட்டம், பிரச்சாரம் என மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. வட இந்தியச் சுற்றுப் பயணம் முடிந்து மார்ச் 1-ஆம் தேதி சென்னை திரும்பினார். அவரை வரவேற்க ஒரு லட்சம் பேர் திரண்டனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 287




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131